Tamil

# Health*elink* உங்களை வரவேற்கிறது

## *ஹெல்த் இ-லிங்க் என்பது என்ன?*

நியூ சவுத் வேல்ஸ் மக்களுக்காக நி.ச.வே. சுகாதார(NSW Health)த்தினால் உருவாக்கப்பட்டுள்ள புதிய மின்னனு சுகாதாரப் பதிவேட்டு முறை(electronic health record system)யே Health*elink* ஆகும். உங்களது உடல்நலப் பராமரிப்பு குறித்து நல்ல முடிவுகளை எடுக்க வேண்டி உங்களது உடல்நலம் குறித்த தகவல்களை உங்களது உடல்நல சேவை வழங்குநர் பெற இது ஏது செய்கிறது.

தற்சமயம் *2142, 2145, 2146, 2147, 2148, 2150, 2153, 2747, 2750, 2770, 2320, 2321, 2322, 2323 & 2324* ஆகிய அஞ்சல் குறியீட்டுப் பகுதிகளில் வசிக்கும் 15 மற்றும் அதற்குக் கீழ்ப்பட்ட வயதுடையோர் மற்றும் 65 மற்றும் அதற்கும் அதிக வயதுடையோர் ஆகியோருக்கு மட்டுமே ஹெல்த் *இ-லிங்க்* வசதி பயன்படுத்தப்படுகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட உடல்நலப் பராமரிப்பு அமைப்புக்களே தற்சமயம் ஹெல்த் *இ-லிங்க்* வசதியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஹெல்த் *இ-லிங்க்* வசதியில் தற்சமயம் பங்கேற்கும் அமைப்புக்களது அட்டவணையைக் காண எமது இணையதளத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

## *ஹெல்த் இ-லிங்க் எப்படி உதவுகிறது?*

உங்களுக்கு விபத்து ஒன்று ஏற்பட்டு, நீங்கள் மருத்துவமனை ஒன்றிற்கு எடுத்துச் செல்லப்படுவதாகக் கற்பனை செய்து பாருங்கள். உங்களது உடல்நலம் குறித்த விவரங்களை உடன் எடுத்துச் செல்ல உங்களுக்கு நேரம் இருக்காது மற்றும் உங்களது உடல்நலம் குறித்த முன்னைய விவரங்கள் அனைத்தையும் உங்களால் நினைவு கூர இயலாமலும் போகலாம். ஹெல்த் இ-லிங்க் வசதியைப் பயன்படுத்துவதன் மூலம், உங்களது கடந்த கால மருத்துவ வரலாறு குறித்தத் தகவல்களை உங்களது மருத்துவர் உடனே பார்த்து தற்சமயம் உங்களுக்கு அளிக்க வேண்டிய சிகிச்சை குறித்து முடிவு எடுக்க இது உதவும். உதாரணமாக, நீங்கள் என்ன மருந்துகள் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள் மற்றும் உங்களுக்கு என்ன ஒவ்வாமைகள் (allergies) உள்ளன என்பதை அவர்கள் அறிவர்.

## *எனது ஹெல்த் இ-லிங்க் பதிவேட்டில் எத்தகவல்கள் இருக்கும்?*

இந்த மின்னனு விவரப் பதிவேட்டு முறையில் பங்குபெறும் சுகாதார சேவை வழங்குநர்களிடம் நீங்கள் முன்பு சென்றபோதெல்லாம் பெறப்பட்ட மருந்தளிப்புகள், ஒவ்வாமைகள், மருத்துவச் சிக்கல்கள் மற்றும் இரத்தப் பரிசோதனை முடிவுகள் ஆகியன குறித்த ஒட்டுமொத்தத் தகவல்ளை ஹெல்த் *இ-லிங்க்* அடக்கியுள்ளது. உதாரணத்திற்கு, நீங்கள் மருத்துவமனை ஒன்றிற்குச் செல்லும்போது அல்லது பொது மருத்துவர் ஒருவரைப் பார்க்கும்போது.

இதர சுகாதார சேவை வழங்குநர்களால் சேகரிக்கப்பட்ட உங்களது உடல்நலம் குறித்த அனைத்து விவரங்களையும் ஹெல்த் *இ-லிங்க்* தகவல்கள் அடக்குவதில்லை. தெரிவு செய்யப்பட்ட தகவல்களை மட்டுமே ஹெல்த் *இ-லிங்க்* சேகரிக்கிறது. மற்றும் நீங்கள் இத்திட்டத்தில் சேரும் நாளில் இருந்து மட்டுமே ஹெல்த் *இ-லிங்க்* உங்களைப் பற்றிய விவரங்ளைச் சேகரிக்கத் துவங்குகிறது.

Tamil

## எனது பதிவேட்டினை யார் பார்க்க இயலும்?

உங்களைப் பற்றித் திரட்டப்பட்ட தகவல்களை நீங்கள் பார்க்கலாம். நீங்கள் இதை இணையம் (internet) மூலம் செய்யலாம் அல்லது இத்தகவல்களது அச்சிடப்பட்ட பிரதி ஒன்று வேண்டுமெனக் கேட்கலாம். உங்களது பதிவேட்டினை யாரெல்லாம் பார்த்திருக்கின்றனர் என்பதையும் நீங்கள் அறியலாம்.

தெரிவு செய்யப்பட்ட சுகாதார சேவையளிப்பாளர்களும் உங்களைப் பற்றிய விவரப் பதிவுகளை அணுகலாம். மருத்துவர்கள், தாதியர், பொது மருத்துவர்கள் (general practitioners) மற்றும் சமூக சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோர் உடல்நல சேவை வழங்குநரில் அடங்குவர். இரகசியத் தன்மையைப் பாதுகாக்கும் ஒப்பந்தமொன்றில் ஒவ்வொருவரும் கையெழுத்திட்டுள்ளனர் மற்றும் இவ்வசதியை அணுகும் பொருட்டு ஒவ்வொருவருக்கும் அவருக்கே உரித்தான அடையாளப்பெயரு(username)ம், கடவுவார்த்தை(password)யும் வழங்கப்பட்டுள்ளன.

## நான் இப்போது செய்யவேண்டியதென்ன?

இத்திட்டத்தில் பங்குபெற வேண்டுமென்றால், நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. இதிதிட்டத்தில் ஏற்கனவே இணைந்துள்ள ஒரு உடல்நலப் பராமரிப்பு சேவையினரிடம் செல்வதன் மூலம் நீங்கள் தானாகவே ஹெல்த் *இ-லிங்க்* திட்டத்தில் சேர்ந்துவிடுவீர்கள்.

உறுதியான ஒரு முடிவிற்கு வரும் பொருட்டு உங்களுக்கு ஒரு 30 நாள் யோசனைக் காலம் (“cooling off”) வழங்கப்படும். இக்காலத்தில் உங்களது உடல்நலத் தகவல்கள் யாருக்கும் கிட்டாது. இருப்பினும், (நீங்கள் இத்திட்டத்தில் இணைய விருப்பமில்லை என முடிவு செய்திருந்தாலொழிய) இந்த 30 நாட்கள் கடந்தவுடன், மருத்துவ சேவை வழங்குநர்கள் உங்களது ஹெல்த் *இ-லிங்க்* பதிவுகளைப் பார்க்க இயலும்.

## நான் இத்திட்டத்தில் சேர வேண்டியது அவசியமா?

இல்லை- நீங்கள் ஹெல்த் *இ-லிங்க்* திட்டத்தில் சேருவது உங்களது விருப்பம். ஹெல்த் இ-லிங்க் வசதியில் சேர நீங்கள் விரும்பவில்லையெனில், **1800 75 22 66** என்ற எண்ணை அழைத்து இதைத் தெரிவிக்கலாம் அல்லது இத்திட்டத்தில் சேர்ந்துள்ள உங்களது பொது மருத்துவரிடம் இதைத் தெரிவிக்கலாம். இது “விலகல்” (“opting out”) என அழைக்கப்படும்.

## இதைப் பற்றிய மேலதிக விபரங்களை நான் எங்கு பெற இயலும்?

ஹெல்த் *இ-லிங்க்* திட்டத்தில் நீங்கள் சேர்ந்திருந்தால், தகவல் ஏடு ஒன்றினை அஞ்சல் வழியாக நீங்கள் பெற்றிருக்க வேண்டும். உங்களைப் பற்றிய பதிவுகளை நீங்கள் எப்படி அணுகுவது என்ற விபரம் உள்ளடங்க இதில் ஹெல்த் *இ-லிங்க்* குறித்த மேலதிகத் தகவல்கள் இருக்கும். மாறாக, எம்மை நீங்கள் **1800 75 22 66** என்ற எண் மூலம் அழைக்கலாம் அல்லது www.healthelink.nsw.gov.au எனும் எமது இணையதளத்திற்கு வருகை தரலாம்.